**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 43/2017**

Deposition of the witness for Prosecution **PW3**
Name : திருமதி.வசந்தி
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (20.07.2026)

A1,A2 present, A3 absent petition filed and allowed, A4, A5 died.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது தென்காசி அனைத்து மகளிர்காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்குமுன்பு தென்காசி அனைத்து மகளிர்காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் ரத்தினபால் சாந்தி மற்றும் காவல் ஆய்வாளர்கள் மாரிமுத்து, முனீஸ்வரன் ஆகியோர் தற்போது பணிமாறுதலாகி சென்றுவிட்டார்கள். அவர் பதிவு செய்து வைத்திருந்த ஆவணங்களை பார்த்து சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 04.01.2013 ஆம் தேதி 11.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் ரத்தினபால் சாந்தி என்பவர் காவல் நிலைய பொறுப்பிலிருந்தபோது செங்கோட்டை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சிகிச்சையில் இருந்த சரண்யா என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பதிவு செய்து நிலையம் வந்துஅதன்தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.1/.2013 சட்டப்பிரிவுகள் 498(A). 294(பி), 323, 506(ii) r/w 109 IPC and Sec 4 of DP Act படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அந்த முதல் தகவல் அறிக்கை **<u>அ.சா.ஆ.2</u>** ஆகும். பின்னர் வழக்கு கோப்பினை காவல் ஆய்வாளர் மாரிமுத்து அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 04.01.2013 ஆம் தேதி 17.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் இசக்கியம்மாள், சங்கரம்மாள் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார்.

மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.3, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகும்.

பின்னர் பட்டியல் சாட்சிகள் சரண்யா, முனியப்பன், ராமர், இசக்கியம்மாள், சங்கரம்மாள் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் ரத்தினபால் சாந்தி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அத்துடன் அவர் பணிமாறுதலாகி சென்றுவிட்டதால் இந்த வழக்கு கோப்பினை பொறுப்பு காவல் ஆய்வாளர் முனிஸ்வரன் அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காயம் பட்ட சரண்யா என்பவருக்கு சிகிச்சை அளித்த செங்கோட்டை அரசு மருத்துவர் ரத்தினபெத் முருகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் பெற்றுள்ளார். அந்த காயச்சான்று **அ.சா.ஆ.5** ஆகும். எதிரிகள் முன்பிணை பெற்றதால் அவர்களை கைது செய்யவில்லை. அத்துடன் வழக்கு விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். சொன்ன மாதிரி, சொன்ன நாள், சொன்ன நேரத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நடக்காத சம்பவத்திற்கு பின்யோசனையுடன் தயாரிக்கப்பட்ட ஆவணங்களுக்காக வேண்டி ஒருதலைபட்சமாக விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்துள்ள பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவை காவல் நிலையத்தில் வைத்து பின் யோசனையுடன் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரிக்காமல் ஒருதலைபட்சமாக விசாரித்து பிழையான குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct. S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2026.07.20 13:51:47 +0530

Judicial Magistrate,
Shenkottai

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 43/2017**

Deposition of the witness for Prosecution **PW2**
Name : முனியப்பன்
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (20.07.2026)

A1,A2 present, A3 absent petition filed and allowed, A4, A5 died.

<u>முதல் விசாரணை</u>

நான்திருப்பூரில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 சரண்யா எனது மகள் ஆவார். இசக்கி துரை எனது மருமகன் ஆவார் தற்போது எனது மகளும், மருமகனும் ஒன்றாக தான் குடியிருந்து வருகிறார்கள். வழக்கு பற்றி சொல்ல விருப்பமில்லை. நாங்கள் சமாதானமாக சென்று விட்டோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்

அரசு தரப்பில் சாட்சி வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.
<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

கடந்த 19/5/2009 ஆம் தேதி எனது மகளும், எதிரியும் காதல் திருமணம் செய்து தனிக்குடித்தனம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். திருமணத்தின் பயனாக ஒரு பெண் குழந்தை உள்ளது என்றால் சரிதான். திருமணத்தில் கூடுதலாக 25 பவுன் நகையும் ரூபாய் 20,000/- பணமும் கேட்டு எனது மகளை கொடுமைப்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. 31/12/2012 ஆம் தேதி மதியம் 12.00 மணிக்கு எதிரிகள் அனைவரும் எனது மகளை பார்த்து அசிங்கமாக பேசினார்கள் என்றால் சரியல்ல. 1 வது எதிரி அம்பாள் எனது மகளை அடித்து காயம் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. 2 வது எதிரி எனது மகளை தலை முடியை பிடித்து இழுத்து கையால் அடித்தார் என்றால் சரியல்ல. எதிரிகள் அனைவரும் எனது மகளை பார்த்து கொலை மிரட்டல்

விடுவித்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவம் நடைபெற்றதாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது அதற்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct. S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2026.07.20 13:51:53 +0530

Judicial Magistrate, Shenkottai